www.shaivism.org

தலம் திருவேதிகுடி
பண் சாதாரி
மூன்றாம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

நீறுவரி ஆடரவொ டாமைமன
என்புநிரை பூண்பரிடபம்
ஏறுவரி யாவரும் இறைஞ்சுகழல்
ஆதியர் இருந்தவிடமாம்
தாறுவிரி பூகமலி வாழைவிரை
நாறவிணை வாளை (1) மடுவில்
வேறுபிரி யாதுவிளை யாடவள
மாரும்வயல் வேதிகுடியே

சொற்பிரிவி லாதமறை பாடிநட
மாடுவர்தொ லானையுரிவை
மற்புரிபு யத்தினிது மேவுவரெந்
நாளும்வளர் வானவர்தொழத்

துற்பரிய நஞ்சமுத மாகமுன்
அயின்றவரி யன்றதொகுசீர்
வெற்பரையன் மங்கையொரு பங்கர்நக
ரென்பர்திரு வேதிகுடியே

போழுமதி பூணரவு கொன்றைமலர்
துன்றுசடை வென்றிபுகமேல்
வாழுநதி தாழுமரு ளாளரிரு
ளார்மிடறர் மாதரிமையோர்
சூழுமிர வாளர்திரு மார்பில்விரி
நூலர்வரி தோலருடைமேல்
வேழவுரி போர்வையினர் மேவுபதி
யென்பர்திரு வேதிகுடியே

காடர்கரி காலர்கனல் கையரனல்
மெய்யருடல் செய்யர்செவியில்
தோடர்தெரி கீளர்சரி கோவணவர்
ஆவணவர் தொல்லைநகர்தான்
பாடலுடை யார்களடி யார்கள்மல
ரோடுபுனல் கொண்டுபணிவார்
வேடமொளி யானபொடி பூசியிசை
மேவுதிரு வேதிகுடியே

சொக்கர்துணை மிக்கஎயில் உக்கறமு
னிந்துதொழு மூவர்மகிழத்

தக்க அருள் பக்கமுற வைத்த அர
னாரினிது தங்குநகர்தான்
கொக்கரவ முற்றபொழில் வெற் றிநிழல்
பற் றி (2) வரி வண்டிசைகுலாம்
மிக்கமரர் மெச்சியினி தச்சமிடர்
போகநல்கு வேதிகுடியே

செய்யதிரு மேனிமிசை வெண்பொடிய
ணிந்துகரு மானுரிவைபோர்த்
தையமிடு மென்றுமட மங்கையொட
கந்திரியும் அண்ணலிடமாம்
வையம்விலை மாறிடினு மேறுபுகழ்
மிக்கிழிவி லாதவகையார்
வெய்யமொழி தண்புலவ ருக்குரைசெ
யாத அவர் வேதிகுடியே

உன்னி இரு போதும் அடி பேணும் அடி
யார்தமிடர் ஒல்க அருளித்
துன்னியொரு நால்வருடன் ஆல்நிழலி
ருந்ததுணை வன்றனிடமாம்
கன்னியரொ டாடவர்கள் மாமணம்
விரும்பியரு மங்கலமிக
மின்னியலும் நுண்ணிடைநன் மங்கையரி
யற்றுபதி வேதிகுடியே

உரக்கரநெ ருப்பெழநெ ருக்கிவரை

பற் றியவொ ருத்தன்முடிதோள்
அரக்கனைய டர்த்தவன் இசைக்கினிது
நல்கியருள் அங்கணனிடம்
முருக்கிதழ்ம டக்கொடிம டந்தையரும்
ஆடவரும் மொய்த்தகலவை
விரைக்குழல்மி கக்கமழ விண்ணிசை
யுலாவுதிரு வேதிகுடியே

பூவின்மிசை அந்தணனொ டாழிபொலி
அங்கையனும் நேடஎரியாய்த்
தேவுமிவ ரல்லரினி யாவரென
நின்றுதிகழ் கின்றவனிடம்
பாவலர்கள் ஓசையியல் கேள்வியத
றாதகொடை யாளர்பயில்வாம்
மேவரிய செல்வநெடு மாடம்வளர்
வீதிநிகழ் வேதிகுடியே

வஞ்சமணர் தேரர்மதி கேடர்தம்ம
னத்தறிவி லாதவர்மொழி
தஞ்சமென என்றும் உண ராத அடி
யார்கருது சைவனிடமாம்
அஞ்சுபுலன் வென்றறுவ கைப்பொருள்
தெரிந்தெழு இசைக்கிளவியால்
வெஞ்சினம் ஒழித்தவர்கள் மேவிநிகழ்
கின்றதிரு வேதிகுடியே

கந்தமலி தண்பொழில்நல் மாடமிடை
  காழிவளர் ஞானமுணர்சம்
பந்தன்மலி செந்தமிழின் மாலைகொடு
  வேதிகுடி யாதிகழலே
சிந்தைசெய வல்லவர்கள் நல்லவர்க
  ளென்னநிகழ் வெய்தியிமையோர்
அந்தவுல கெய்தி அர சாளும் அது
  வேசரதம் ஆணைநமதே

திருச்சிற்றம்பலம்

(1) இனவாளை
(2) பற்ற

www.shaivism.org